பாடம் 8

# Quantitative and Indefinite Pronouns
# அளவுசார்ந்த மாற்றுப்பெயர்களும் பொதுநிலை மாற்றுப்பெயர்களும்

## அளவுசார்ந்த மாற்றுப் பெயர்கள்:

**much, many, a few, a little** என்பன அளவுசார்ந்த ஒரு சில மாற்றுப்பெயர்களாகும். **many, a few** என்பன எண்ணக்கூடியவற்றைக் குறிக்கும் சொற்களுடன் பயன்படுத்தப் படும். **much, a little** என்பன எண்ண முடியாதவற்றைக் குறிக்கும் சொற்களுடன் பயன்படுத்தப்படும்.

## உதாரணங்கள்:

There are **many** girls in my class.
எனது வகுப்பில் **பல** பெண் பிள்ளைகள் இருக்கிறார்கள்.

There is **a little** tea in my cup.
எனது குவளையில் **சொற்ப அளவு** தேநீர் இருக்கின்றது.

**பொதுநிலை மாற்றுப்பெயர்கள்:**

பொதுநிலை மாற்றுப் பெயர்கள், முன்பின் தெரியாத அல்லது குறிப்பாகச் சுட்டப்படாத ஆளையோ, இடத்தையோ, பொருளையோ குறிக்கும். சரியான வினைச் சொல்லைச் சேர்த்துக்கொள்வதற்கு, குறிப்பிட்ட மாற்றுப்பெயர் ஒருமையா, பன்மையா என்பதை நீங்கள் இனங்கண்டுகொள்ள வேண்டும்.

பெரிதும் பயன்படுத்தப்படும், பொதுநிலை மாற்றுப் பெயர்கள் சில பின்வருமாறு:

| | |
|---|---|
| all | அனைத்து |
| another | இன்னுமொரு |
| any | ஏதாவது |
| anybody | யாராவது |
| anyone | யாரும் |
| anything | ஏதாவது |
| each | ஒவ்வொரு |
| everybody | அனைவரும் |
| eveyone | ஒவ்வொருவரும் |
| everything | எல்லாம் |
| few | சில |
| many | பல |
| nobody | யாரும் |
| none | எவரும் |
| one | ஒன்று |
| several | பல்வேறு |
| some | சில |
| somebody | யாரோ ஒருவர் |
| someone | யாரோ ஒருவர் |

**உதாரணங்கள்:**

**All** the people clapped their hands after the concert.
இசை நிகழ்ச்சியின் பின்னர், **எல்லோரும்** கைதட்டினார்கள்.

There was **nobody** at home.
வீட்டில் **ஒருவரும்** இல்லை.

Is there **anything** to eat in the kitchen?
சமையலறையில், உண்பதற்கு **ஏதாவது** இருக்கின்றதா?

இப்பொதுநிலை மாற்றுப்பெயர்களுட் சில, பொதுநிலைப் பெயரடைகளாகவும் பயன்படுத்தப்படலாம்.